நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம், சேலம் அவர்களின்

நடவடிக்கைகள்

முன்னிலை: திரு. இரா. வாழவந்தான், பி.,இ.

ந.க.எண்.4705/2018–சே.ம.3 நாள்.07.03.2019.

ஐயா,

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவுகள் மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம், 2017 – நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் – சேலம் மண்டலம் – திருப்பூர் மாவட்டம் – ஊத்துக்குளி வட்டம்/ஊராட்சி ஒன்றியம் – விருமாண்டம்பாளையம் ஊராட்சி/கிராமம் – ச.எண். 282/5 பகுதியில் 1.50ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள "ஸ்ரீ வெற்றிவேல் நகர்'' அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை [UD4(3)], நாள். 04.05.2017.
2. அரசாணை எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை [UD4(3)], நாள். 13.10.2017.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண். 13193/2017/எல்ஏ2, நாள். 30.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 13193/2017–எல்.ஏ.2, நாள். 07.01.2019.
5. மனுதாரர் திரு எஸ். முருகன், திருப்பூர் அவர்களின் Online Application No. DTCP/L/0159280/2017, நாள். 28.04.2018.

-------

**உத்தரவு:**

பார்வை 1 மற்றும் 2 –ல் கண்ட அரசாணையின்படியும், பார்வை 3–ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை 5–ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி வட்டம்/ஊராட்சி ஒன்றியம், விருமாண்டம்பாளையம் ஊராட்சி/கிராமம், ச.எண். 282/5 பகுதியில் 1.50 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள "ஸ்ரீ வெற்றிவேல் நகர்'' அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ./ம(சே)எண்.345/2019**, **வரன்முறை மனைப்பிரிவு எண்.304/2019**, என எண்ணிடப்பட்டு, கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

மனைப்பிரிவின் மொத்த பரப்பு : 1.50 ஏக்கர் (அ) 65340.00 சதுர அடி

93

விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை : 6

விற்கப்பட்ட மனை எண்கள் : மனை எண். 2 to 5, 29, 30.

விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை : 24

விற்கப்படாத மனைகளின் எண்கள் : மனை எண்கள். 6 to 28, 32.

விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு : மனைப்பிரிவு பரப்பு – (சாலைகள் பரப்பு + விற்கப்பட்ட மனைகளின் பரப்பு + ஏற்கனவே ஒதுக்கப்பட்ட பொது ஒதுக்கீடு)
65340.00 – (16411.91 +1843.25 + 10920.00)
= 36164.84 சதுர அடி

திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு
பூங்கா–1 : 1843.25 ச.அடி (மனை எண். 1)
பூங்கா–2 : 1874.00 ச.அடி (மனை எண். 31)

மொத்தம் : 3717.25 ச.அடி

பூங்காவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள மனைகள் : மனை எண். 1, 31.

**I. செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்.**

**அ. பரிசீலனைக் கட்டணம்**

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய விவரம் | 25 மனைகளுக்கு ரூ. 12,500/– (ரூபாய் பன்னிரெண்டாயிரத்து ஐநூறு மட்டும்) Registration Slip No. DTCP/L/0159280/2017, நாள். 28.04.2018 மூலம் செலுத்தப்பட்டுள்ளது. |

1 புத்தக ... 1464 ஆவணம்
13 தாள் ... கொண்டது
9 வது தாள் ... பதிவு அலுவலர்

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

**ஆ. வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்**

வரன்முறைப்படுத்தும் கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு **30** ரூபாய் வீதமும் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு **25** ரூபாய் வீதமும் செலுத்தப்பட வேண்டும்.

அ) வரன்முறைபடுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு:

| | |
|---|---|
| 0217 - Urban Development<br>60 - Other Urban Development Schemes<br>800 - Other Receipts<br>AT - Receipts under Regularization Charges of Unapproved Layout and Plots-DTCP 27 Non-Taxation Fees - 30 Regularisation.<br>(D.P. Code: 0217-60-800-AT-2730) | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) <u>வளர்ச்சிக் கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.</u>

<u>வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண்:</u> (உரிய கணக்கு தலைப்பில்)

மேற்காண் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2–ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தில் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:</u>

1. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள். 13.10.2017–ல் விதி எண். 7(g)(ii)–ன் படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

3. புல வரைபடத்தில் உள்ள அளவுகளின் அடிப்படையில் மனைப்பிரிவில் உள்ள மனைகள் மற்றும் ஒதுக்கீடுகளின் நீள அகல அளவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையிலேயே மனைகள் மற்றும் ஒதுக்கீடுகளின் அளவுகள் உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும். விற்கப்பட்ட மனைகளின் அளவுகள் இவ்வரைபடத்தில் உள்ள அளவுகளுக்கு மாறுபாடு இருப்பின் திருத்தப் பத்திரம் செய்து கொள்ளப் பட வேண்டும். கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்

இரண்டும் நகல்கள் மேல் நடவடிக்கைகாக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
சேலம் மண்டலம், சேலம்.

இணைப்பு

1. மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்.
2. வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் பட்டியல்.

பெறுநர்

தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்,
விருமாண்டம்பாளையம் ஊராட்சி,
ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம்,
ஊத்துக்குளி வட்டம்,
திருப்பூர் மாவட்டம்.

நகல்

1. மனுதாரர் திரு எஸ். முருகன்,
1/247பி, எலீல் நகர் என்.எச். 47 மெயின் ரோடு,
செங்கப்பள்ளி,
திருப்பூர் – 638 812.

2. சார்பதிவாளர்,
குன்னத்தூர் சார்பதிவாளர் அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்.
— சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு.

3. உதவி இயக்குநர் (நில அளவை),
திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்.
— சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு.

1464
13
11 வருநாள்
பதிவு அலுவலர்

ஊத்துக்குளி வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) / தனி அலுவலர் அவர்களின் செயலாணை
பிறப்பிப்பவர்: திரு. கெ.மனோகரன்

ந.க.எண்: 1810/2018/ஆ2

நாள் : 30.04.2019

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு மற்றும் வரன்முறைப்படுத்துதல் திட்டம் - 2017 திருப்பூர் மாவட்டம் - ஊத்துக்குளி வட்டாரம் - அனுமதியற்ற மனைப்பிரிவில் 20.10.2016க்கு முன்னர் பதிவு மேற்கொண்ட குடியிருப்பு பகுதி மனைப்பிரிவுகள் வரன்முறைப்படுத்துதல் - வரன்முறைப்படுத்துதலுக்கு உண்டான மனைகளை உரிய கட்டணங்களை செலுத்த உத்திரவிடப்பட்டது - தொகை செலுத்தப்பட்டது - வரன்முறை படுத்தி உத்திரவிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, ந.வ.4(3), நாள்.04.05.2017
2. அரசாணை எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, ந.வ.4(3), நாள்.13.10.2017
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை-2 அவர்களது வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்.13193/2017 எல்ஏ2, நாள்.30.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.13193/2017 எல்ஏ2, நாள்.07.01.2019
5. சேலம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்:4705/2018 சேம-3 நாள்: 07.03.2019

*********************

**உத்தரவு:**

பார்வை (1) மற்றும் (2) காணும் அரசாணைகளின் படி, திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி வட்டாரம் விருமாண்டம்பாளையம் ஊராட்சி விருமாண்டம்பாளையம் கிராமம் ரீ.ச.எண்."282/5 (பகுதி)" அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் கீழ்க்கண்ட விற்க்கப்படாத தனிமனையினை வரன்முறைப்படுத்த குடியிருப்பு விண்ணப்பம் சரிபார்க்கப்பட்டு, பார்வை (5)ல் காணும் சேலம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனவே விற்க்கப்படாத தனி மனை வரன்முறை படுத்தும் பொருட்டு கீழ்க்கண்டவாறு வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் உரிய கணக்கில் செலுத்தியுள்ளார்.

| வ. எண் | மனைப்பிரிவின் பெயர் / முகவரி | DTCP எண் | க.ச எண் / ரீ.ச. எண் | மனை எண் | பரப்பளவு (ச.மீ) | செலுத்தப்பட்ட வரன்முறை கட்டணம் (ரூ.30/ச.மீ) | செலுத்தப்பட்ட வளர்ச்சி கட்டணம் (ரூ.25/ச.மீ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீ வெற்றிவேல் நகர்/ விருமாண்டம்பாளையம் | 304 /2019 | 282/5 (பகுதி) | 6 | 139.41 | 4200 | 3500 |
| 2 | " " | " " | " " | 7 | 139.41 | 4200 | 3500 |
| 3 | " " | " " | " " | 8 | 139.41 | 4200 | 3500 |
| 4 | " " | " " | " " | 9 | 139.41 | 4200 | 3500 |
| 5 | " " | " " | " " | 10 | 139.41 | 4200 | 3500 |
| 6 | " " | " " | " " | 11 | 139.41 | 4200 | 3500 |
| 7 | " " | " " | " " | 12 | 139.41 | 4200 | 3500 |
| 8 | " " | " " | " " | 13 | 139.41 | 4200 | 3500 |
| 9 | " " | " " | " " | 14 | 209.89 | 6300 | 5250 |
| 10 | " " | " " | " " | 15 | 139.75 | 4200 | 3500 |
| 11 | " " | " " | " " | 16 | 139.41 | 4200 | 3500 |
| 12 | " " | " " | " " | 17 | 139.41 | 4200 | 3500 |
| 13 | " " | " " | " " | 18 | 139.41 | 4200 | 3500 |
| 14 | " " | " " | " " | 19 | 139.41 | 4200 | 3500 |
| 15 | " " | " " | " " | 20 | 139.41 | 4200 | 3500 |
| 16 | " " | " " | " " | 21 | 139.41 | 4200 | 3500 |
| 17 | " " | " " | " " | 22 | 150.23 | 4550 | 3800 |
| 18 | " " | " " | " " | 23 | 164.15 | 4950 | 4150 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 19 | " " | " " | " " | 24 | 165.89 | 5000 | 4150 |
| 20 | " " | " " | " " | 25 | 167.29 | 5050 | 4200 |
| 21 | " " | " " | " " | 26 | 169.03 | 5100 | 4250 |
| 22 | " " | " " | " " | 27 | 170.77 | 5150 | 4300 |
| 23 | " " | " " | " " | 28 | 161.27 | 4900 | 4050 |
| 24 | " " | " " | " " | 32 | 65.97 | 2000 | 1650 |
| மொத்தம் | | | | | **3515.98** | **106000** | **88300** |

எனவே மேற்படி கட்டணங்கள்யாவும் செலுத்தப்பட்டுள்ளதால் விருமாண்டம்பாளையம் ஊராட்சி விருமாண்டம்பாளையம் கிராமம் சர்வே எண்/ ரீ.சா.எண்: 282/5 (பகுதி)-ல் "ஸ்ரீ வெற்றிவேல் நகர்" என்ற மனைப்பிரிவில் திரு.S.முருகன், 1/247B, எழில் நகர், NH47 மெயின் ரோடு, செங்கப்பள்ளி, ஊத்துக்குளி என்பவருக்கு சொந்தமான மனை எண்கள்:-6 முதல் 28 மற்றும் 32-ஐ வரன்முறை படுத்தி இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

ஊராட்சி ஒன்றிய அலுவலகம்
30 APR 2019
ஊத்துக்குளி

30/4/19

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
ஊத்துக்குளி

பெறுநர் : திரு.S.முருகன், 1/247B, எழில் நகர், NH47 மெயின் ரோடு, செங்கப்பள்ளி, ஊத்துக்குளி

நகல்: 1. மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. தனி அலுவலர் விருமாண்டம்பாளையம், ஊராட்சி (இருப்பு கோப்பிற்கு)